செ.வெ.எண். 64 நாள். 25.04.2017

## மாவட்ட ஆட்சியரின் செய்தி குறிப்பு:

மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் அவர்களின், தமிழ்நாடு சட்டபேரவை முன்பாக அளித்த சுற்றுச்சூழல் துறையின் மானிய கோரிக்கை 2016-ல் அறிவித்தபடி, திருநெல்வேலி மாநகராட்சியில் 'அம்மா சுற்றுச்சூழல் அரங்கம்' அமைப்பதற்கு ரூ. 50 லட்சம் நிதியானது, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைய உள்ள 'அம்மா சுற்றுச்சூழல் அரங்க'த்தில் திடக்கழிவு மேலாண்மை, மின்னணு கழிவுகள் மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை, அபாயகரமான மற்றும் தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகள் மேலாண்மை, மருத்துவக் கழிவுகள் மேலாண்மை, கட்டிடக் கழிவுகள் மேலாண்மை, வாகன புகை கட்டுபாடு, ஒலி மாசு கட்டுபாடு, நீர் மேலாண்மை, மழைநீர் சேகரிப்பு, மரங்கள் நடுதல் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த செயல்படும் மாதிரிகள் அமைய உள்ளன.

திருநெல்வேலி மாநகராட்சியில், வேய்ந்தான்குளம் புதிய பேருந்து நிலையத்தின் முன்வாயிலில், மாநகராட்சியால் பராமரிக்கப்படும் பூங்காவில் உரிய இடம் தேர்வு செய்யப்பட்டு அதில் 'அம்மா சுற்றுச்சூழல் அரங்கம்' அமைய உள்ளது.

அவ்வாறு அமைய உள்ள 'அம்மா சுற்றுச்சூழல் அரங்கம்', பின்பு பொதுமக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்படும். இந்த 'அம்மா சுற்றுச்சூழல் அரங்க'த்தில், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த செயல்படும் மாதிரிகள், விழிப்புணர்வு காட்சி பொருட்கள் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் குறித்த பதாகைகள் அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதாக அமையும்.

மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி